**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No. 77/2025**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **கன்னிகா பரமேஷ்வரி** | தொழில் | : Beautician |
| தகப்பனார் பெயர் | : ------ | கணவர் பெயர் | : ஹரிஹரன் |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 24/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 06.07.2026 |

**( எதிரிகள் A1, A3, A4, A6 ஆஜரில் உள்ளனர், எதிரிகள் A2, A5 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**முதல் விசாரணை :**

நான் பண்ணைக்காட்டில் வசித்து Beautician ஆக வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் எனது கணவர் மற்றும் கணவரது குடும்பத்தார் ஆவார்கள் . 1ம் எதிரி எனது கணவர் ஆவார் . தற்போது நானும் , எனது கணவரும் ஒன்றாகத்தான் வசித்து வருகிறோம் . எனக்கும், எனது கணவருக்கும் அவ்வப்போது குடும்பச்சண்டை வரும் . இது தொடர்பாக எனது கணவரும் என்னுடன் சேர்த்து வைக்கச்சொல்லி தாண்டிக்குடி காவல்நிலையத்தில் முறையிட்டபோது எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். வழக்கு குறித்து வேறு விபரங்கள் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

கடந்த 27.06.2025ம் தேதி இரவு 07.00 மணியளவில் எனது கணவர் மற்றும் அவரது குடும்பத்தார் என்னை அசிங்கமாக பேசி , கைகளால் தாக்கி ஊமைக்காயம் ஏற்படுத்தினார்கள் என்றாலும் , அதன் காரணமாக நான் எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றாலும், அதைத் தொடர்ந்து இரவு 11.30 மணியளவில் எதிரிகள் என் வீட்டிற்கு வந்து சத்தம் போட்டார்கள் என்றாலும், அப்போது எனது அப்பா செந்தில்குமார் , அம்மா அழகேஸ்வரி, அண்ணன் அருண்கார்த்திக் வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்தபோது எதிரிகள் எங்கள் குடும்பத்தாரை ஆபாசமாக திட்டினார்கள் என்றாலும், எதிரி பிரசன்னா அருகில் இருந்த காப்பிக்கட்டையை எடுத்துவந்து எனது அப்பா , அம்மாவை தலையில் தாக்கி இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றாலும், பிறகு அருகில் இருந்தவர்கள் வந்து சண்டையை விலக்கி விட்டார்கள் என்றால் சரியல்ல . எதிரி எனது கணவர் என்பதாலும் , மற்ற எதிரிகள் எனது கணவரின் குடும்பத்தார் என்பதாலும் அவர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டதாலும் , எதிரிகளுக்கு ஆதரவாக , வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.06 17:10:28 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**
**CC.No. 77/2025**
**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **செந்தில்குமார்** | தொழில் | : தோட்ட வேலை |
| தகப்பனார் பெயர் | : சிவராஜ் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 53/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 06.07.2026 |

**( எதிரிகள் A1, A3, A4, A6 ஆஜரில் உள்ளனர், எதிரிகள் A2, A5 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**முதல் விசாரணை :**

எதிரிகளைத் தெரியும். எதிரிகள் எனது சம்பந்தி உறவு முறை வேண்டும். , எதிரிகள் குடித்துவிட்டு வந்து பிரச்சனை செய்தார்கள் . வழக்கு குறித்து வேறு விபரங்கள் தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக**

Counsel Mr.J. Clement Raja representing the accused present. Stated no crossed. Hence cross of PW2 is closed.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.06 17:10:34 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**
**CC.No. 77/2025**
**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **அழகேஸ்வரி** | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : ------ | கணவர் பெயர் | : செந்தில்குமார் |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 48/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 06.07.2026 |

**( எதிரிகள் A1, A3, A4, A6 ஆஜரில் உள்ளனர், எதிரிகள் A2, A5 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பண்ணைக்காட்டில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் சம்பந்தி உறவு முறை ஆவார்கள் . இந்த வழக்கானது எங்கள் குடும்ப பிரச்சனை ஆகும் . வேறு எதுவும் நடக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

கடந்த 27.06.2025 ம் தேதி இரவு 07.00 மணியளவில் அ.சா.1 ன் கணவர் மற்றும் அவரது குடும்பத்தார் அ.சா.1 அசிங்கமாக பேசி, கைகளால் தாக்கி ஊமைக்காயம் ஏற்படுத்தினார்கள் என்றாலும் , அதன் காரணமாக அ.சா.1 என் வீட்டிற்கு வந்தார் என்றாலும் ,

அதைத் தொடர்ந்து இரவு 11.30 மணியளவில் எதிரிகள் என் வீட்டிற்கு வந்து சத்தம் போட்டார்கள் என்றாலும், அப்போது எனது கணவர் செந்தில்குமார் , நான், எனது மகன் அருண்கார்த்திக் வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்தபோது எதிரிகள் எங்கள் குடும்பத்தாரை ஆபாசமாக திட்டினார்கள் என்றாலும் , எதிரி பிரசன்னா அருகில் இருந்த காப்பிக்கட்டையை எடுத்துவந்து எனது கணவரையும் , என்னையும் தலையில் தாக்கி இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றாலும் , பிறகு அருகில் இருந்தவர்கள் வந்து சண்டையை விலக்கி விட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரி எனது மருமகன் மற்றும் அவரது குடும்பத்தார்கள் என்பதாலும், அவர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டதாலும், எதிரிகளுக்கு ஆதரவாக , வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.06 17:10:41 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.